## க.பொ.த (உயர் தரம்) பயிற்சிப் பரீட்சை – 2019- மார்ச்
## தரம் 13

பாட இலக்கம் 32 வணிகக்கல்வி

## புள்ளி வழங்கும் திட்டம்
## பகுதி 1
## விடைகள்

| | |
|---|---|
| 1. 4 | 16. 1 |
| 2. 3 | 17. 2 |
| 3. 5 | 18. 3 |
| 4. 2 | 19. 5 |
| 5. 1 | 20. 2 |
| 6. 5 | 21. 3 |
| 7. 2 | 22. 4 |
| 8. 5 | 23. 3 |
| 9. 1 | 24. 4 |
| 10. 4 | 25. 4 |
| 11. 2 | 26. 3 |
| 12. 3 | 27. 1 |
| 13. 1 | 28. 2 |
| 14. 2 | 29. 4 |
| 15. 4 | 30. 5 |

(2×30=60 புள்ளிகள்)

## பகுதி 11

31. (அ) வாடிக்கையாளர் அரசு
(ஆ) பொருளாதாரச் சூழல் சமூக கலாசாரச் சூழல்

32. (அ) சூழல் பொருளாதாரம்
(ஆ) மீள் சூழற்சி மீள் உருவாக்கல்

33. (அ) வட்டி வீதம் சட்டரீதியான ஒதுக்கம்
(அ) ஐ.அ. குடியரசின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எவ் கெனடி சர்வதேச நுகர்வோர்கள்

34. (A) சரி (B) பிழை (C) பிழை (D) சரி

35. (அ) முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள் (ஆ) வரவட்டை

36. (அ) கப்பல் தண்டக் காப்புறுதி(Hull) (2) கப்பல் சரக்குக் காப்புறுதி(Cargo)
(ஆ) செய்தி பெறுபவர்

37. (அ) செயற்பாடுசார் தலைமைத்துவம்( Task oriented style)
ஊழியர்சார் தலைமைத்துவம் (Employee oriented style)
(ஆ) முன்னூட்டல் கட்டுப்பாடு ( Feed forward Control)
செயன்முறைக் கட்டுப்பாடு( Concurrent Control)

38. (அ) நிலைமாற்றல் சேர்க்கப்பட்ட பெறுமதி
(ஆ) உச்ச இருப்பு பயன்பாடு மறுகட்டளை மட்டம்

39. (அ) வசதிப் பொருட்கள் நாடாப் பொருட்கள்
(ஆ) போட்டியாளர் விலை கேள்வி

40. (அ) 2:1 1:1
(ஆ) தொழில் குறித்துரைத்தல் (Job specification)
தொழில் விபரணம் (Job Discription)

41. 1. பண்டமாற்று 2. பணப்பாவனை
3. கைத்தொழில் புரட்சி 4. தகவல் பொருளாதாரம்

42. 1. அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை
2. தொடர்ச்சியான பங்களிப்பு
3. சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
4. சூழல் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
5. ஒத்துழைப்பு

43. 1. பரிமாற்று ஊடகமொன்றாகக் கருமமாற்றல் (A medium of exchange)
2. பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவியொன்றாகக் கருமமாற்றல் (Standard of value)
3. பெறுமானத் திரட்டாகக் கருமமாற்றல் (Store of value)
4. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமொன்றாகக் கருமமாற்றுதல் (Differred payment)

44. 1. சமநிறை கொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை (Balanced logistic System)
2. உற்பத்தி செயன்முறை வரை பாய்தல் சிக்கல் கொண்ட முறைமை (Heavy inbound Logistic System)
3. உற்பத்தியின் பின்னர் இறுதி நுகர்வோனின் கைக்குக் கிடைக்கச் செய்யும் சிக்கல் நிறைந்த முறைமை (Heavy out bound Logistic system
4. உற்பத்தி பொருட்களை விநியோகித்த பின்னர் மீள்பாய்ச்சலுடன் கூடிய முறைமை (Reverse Logistic System)

45. 1. தரகு முகவர்கள் 2. தரகர்கள்
3. காரணிகர்கள் 4. பொறுப்பு முகவர்கள் 5. ஏல விற்பனையாளர்கள்

46. 1. மிக விரைவாகத் தீர்மானமெடுக்க முடிதல்.
2. தீர்மானங்களில் ஒருமைப்பாடு காணப்படல்.
3. கட்டுப்பாட்டுக் கருமங்கள் இலகுவாக அமைதல்.
4. தொடர்பாடல் இலகுவாக அமைதல்.
5. குறைந்த கிரயம்

47. 1. இருப்பு மட்டத்தை உறுதிப்படுத்தும் முறை (Stock Level Determining System)
2. ABC பகுப்பாய்வு முறை (ABC Analysis)
3. இரட்டைக் கொள்கலன் முறை (Two Bin System)
4. தொடர் இருப்பு அறிக்கைபடுத்தும் முறை (Continuous Stock Recording System)
5. கணினி நிகழ்ச்சித் திட்டம் (Computer Program)
6. JIT முறை (JIT Method)

48. தனிப்பட்ட சின்னம்:- அரலிய சீனி, நிபுன அரிசி, விஜய மிளகாய்த்தூள்
குடும்பச் சின்னம் :- MD உற்பத்திகள், ஹரிஸ்சந்திர உற்பத்திகள்
தேசிய சின்னம் :- சிங்கர், Coca Cola
பொருள் சின்னம்:- லிவர் பிரதர்ஸ் உற்பத்தி செய்யும் சன்லைட், லக்ஸ், சிக்னல், அஸ்ரா

49. 1. வியாபாரக் கடன் கொடுநர் தொடர்பான தீர்மானம்
2. வங்கி மேலதிகப் பற்று மற்றும் ஏனைய குறுங்கால வங்கிக் கடன் தொடர்பான தீர்மானம்
3. செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பான தீர்மானம்
4. மூலதனக் கட்டமைப்புத் (மூலதனக் கலவை) தொடர்பான தீர்மானம்
5. பங்குலாபம் தொடர்பான தீர்மானம்

50. ஊடக மூலமான விளம்பரம் (அச்சு / இலத்திரனியல்)
வலைப்பின்னல் / தொழில் வலையமைப்புக்களின் மூலம்
கடந்தகால ஊழியர்கள் மூலம்
கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மூலம்
தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம்
தொழிற் சங்கங்கள் மூலம்
தொழிற் சந்தைகள் மூலம்

## பகுதி 11

### வினா இல 01

1.

a) மனித தேவை- உணவு
மனித விருப்பம்- முட்டை, இறைச்சி, கேக் வகைகள் (2× ½ = 1 புள்ளி)

b) 1. விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்.
2. பொருள்கள் சேவைகளில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்
3. தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்
4. நட்ட இடர் காணப்படல்
5. விருப்பங்களைத் தோற்றுவித்தல்
6. பொருளாதார கருமமொன்றாக இருத்தல் (4× ½ = 2 புள்ளிகள்)

c) 1. மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
2 புத்துருவாக்கம்
3. தொழில் உருவாக்கம்
4. தேசிய பொருளாதார விருத்தி (2× ½ = 1 புள்ளி)

2. a) 1. சம்பள மட்டம் அதிகரிப்பதன் காரணமாக அண்மிய சூழற்காரணியொன்றாகிய வாடிக்கையாளரின் (நுகர்வோரின்) வருமானம் அதிகரித்துப் பொருட்கள், சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும்.
2. பொருள்கள், சேவைகளது விலை மட்டங்கள் அதிகரிப்பதன் காரணமாக வழங்குனர்களால் வழங்கப்படும் பொருள்கள், சேவைகளின் விலைமட்டங்களும் உயர்வடையும்.
(பொருத்தமான இரண்டு உதாரணங்களுக்கு 02 புள்ளிகள்)

b) பொருளாதாரச் சூழல் (01 புள்ளி)

விலை, பணவீக்கம், வட்டிவீதம், மொத்தத் தேசிய உற்பத்தி,
வேலை வாய்ப்பு, வாழ்க்கைச் செலவு, வருமானப் பகிர்வின் முரண்பாடு,
சேமிப்பு, முதலீடு. (2× ½ = 1 புள்ளி)

3. அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திக் குழு, பெற்றோர்,
மாணவர் தொடர்பில் அக்கறை காட்டும் ஏனைய தரப்பினர் (4× ½ = 2 புள்ளிகள்)

- பொருத்தமான அக்கறை காட்டும் காரணங்கள் இரண்டுக்கு (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) 1. தொழில் வழங்குநர், தொழில் பெறுபவர் உரிமை கடமைகளை பாதுகாக்க முடிதல்
2. சாதி, குல, சமய, ஆண், பெண், எனும் வகையில் இடம்பெறும் அசாதாரண நிலைமைகள் இடம்பெறாத வகையில் செயற்படமுடிதல் (2×1=2 புள்ளிகள்)

b) 1. மானிடப் பல்லினத் தன்மைகளுக்கு மதிப்பளித்துக் கருமமாற்றல்
2. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
3. சமத்துவத்தன்மையுடன் கருமமாற்றுதலும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குதலும்
4. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்குப் பங்களிப்பு செய்தல்.
5. சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்கிளிப்புச் செய்தல்.
6. பல்லினத்தன்மை கொண்ட கலாசாரத்திற்கு மதிப்பளிதத்தலும், அவற்றைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தலும்
7. சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

5. a) வணிகங்களின் விருத்தியினூடாக அரசின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும். அதேபோன்று வணிகவளர்ச்சியின் காரணமாக அரசிற்கு வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வருமானத்தைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யவும், ஏனைய கருமங்களுக்கும் பயன்படுத்த முடியும்.
(வேறு பொருத்தமான உதாரணங்களுக்கும் புள்ளி வழங்கவும்) (02 புள்ளிகள்)

b) 1. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகாரசபை
2. இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம்
3. அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
4. மத்திய சூழல் அதிகாரசபை
5. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
6. மாவட்ட செயலாளர் அலுவலகம் (4× ½ = 2 புள்ளிகள்)

## வினா இல 02


1. a) 1. இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கவரியினை அறவிடுவதன் மூலம் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுவதுடன், உள்நாட்டு உற்பத்தியையும் அதிகரித்து உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்க முடியும்.
   2. உள்நாட்டு உற்பத்திகளின் மீது வரிகள் அறவிடப்படுவதன் காரணமாக பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிக்கலாம்.
   3. அரசு உட்கட்டமைப்பு வசதிகளுக்குச் செலவுகள் செய்வதனால் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக அமையும்.

   b) 1. சந்தையில் பொருள்கள் சேவைகள் பரவலாகக் காணப்படல்.
   2. போட்டித்தன்மை அதிகரித்திருப்பதனால் சந்தையில் மோசடிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருத்தல்.
   3. சுதந்திரமான வியாபாரம் காரணமாக சந்தை சிக்கல் கொண்டதாகக் காணப்படல்.
   4. பூகோளமயமாதலுடன் ஏற்படக்கூடிய சமூக கலாசார சீரழிவுகள்
   5. சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்காக நுகர்வோர்களை அறியச் செய்வதற்கும் தேவையானதாக இருத்தல்.

2.

| **நியதிகள்** | **தனியாள் உடைமை** | **பங்குடைமை வணிகம்** |
|---|---|---|
| அங்கத்தவர்களின் எண்ணிக்கை | தனியொருவர் | குறைந்தது இருவர், கூடியது 20 பேர் |
| பொறுப்புக்கள் | தனியாக | பங்காளர்கள் ஒருமைப்பாட்டுடன் பொறுப்பேற்பர். |
| தீர்மானமெடுத்தல் | சுயாதீனமாக | ஒருமைப்பாட்டுடன் தீர்மானமெடுப்பர். |
| கலைத்தல் | கலைத்தல் இடம் பெறாது விருப்பத்தின் அடிப்படையில் வணிகத்தைக் கலைத்தல். | சுயமாக அல்லது நீதிமன்றத் தீர்ப்பின்படி கலைக்கப்படுதல் |
| | (4× ½ = 2 புள்ளிகள்) | (4× ½ = 2 புள்ளிகள்) |

3. a)




   b) **கூட்டுறவின் பின்னடைவிற்கான காரணங்கள்**
   1. திறந்த சந்தை முறைமை
   2. பூகோளமயமாக்கம்
   3. சந்தை போட்டிக்கு முகம் கொடுக்க போதிய நிதிபலமும், முகாமைத்துவ ஆற்றலும் காணப்படாமை
   4. நவீன தொழில்நுட்பம், நவீன முகாமைத்துவ முறைமையை பயன்படுத்தாமை
   5. முதன்மையாக காணப்படும் ஊழல்மோசடிகள்
   6. அரசியல் தலையீடுகள்
   7. முகாமையாளர், ஊழியர் தொடர்பான திறன்களை உருவாக்கத் தவறியமை

8. மக்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் குறைவடைந்தமையும், பொதுமக்கள் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்துவத்தை பெற முன்வராமையும்
9. கூட்டுறவின் பண்புகள் இல்லாமல் போனமை
10. நிதி முறைமைகளுள் பிரவேசிக்கத் தவறியமை (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) **முயற்சியாண்மையின் முக்கியத்துவம்**
1. வேகமாக மாற்றமடைந்து வருகின்ற உலகின் மாற்றங்களுக்கு எதிர்விளைவை காட்டக்கூடிய **புத்தாக்கங்களை கண்டுபிடிக்கக்கூடிய முயற்சியாளர்களின் தேவை** மிகப் பாரியளவில் காணப்படல்.
2. போட்டியாளர்களைக் கொண்ட வணிக உலகில் **தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு புத்தாக்கங்களை** உருவாக்குவதன் தேவைப்பாடு காணப்படல்.
3. மாற்றமடைந்து வரும் உலகிற்கு முயற்சியாளர்களே **தலைமைத்துவத்தை வழங்கக்** கூடியதாக இருப்பதனால் சகல அமைப்புக்களுக்கும் முயற்சியாளர்கள் தேவைப்படல்.
4. தனிநபர் தேவைகள், விருப்பங்களை உயர்மட்டத்தில் நிறைவு செய்வதன் மூலம் **வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப்** புத்தாக்கம் புனைதலின் தேவைப்பாடு காணப்படல்.
5. நாளாந்தம் மாற்றமடைந்து வருகின்ற **புதிய தொழினுட்பங்களுக்கேற்ப வணிகக் கருமங்களை விருத்தி** செய்வதற்கான தேவைப்பாடு காணப்படல்.
6. புதிய வணிகங்களை ஆரம்பிப்பதனூடாகத் **தொழில்களை உருவாக்கக்கூடியதாக இருத்தல்**.

(4× ½ = 2 புள்ளிகள்)

b) முயற்சியாண்மை விருத்தியடைய அவசியமான காரணிகள்
1. விருத்தியடைந்த நிதிச்சந்தை
2. முயற்சியாண்மைக்கு இணக்கமான சூழ்நிலை (பொருத்தமான வரிக்கொள்கை, சட்டவாக்கங்கள்)
3. மிக உயர்வான தேசிய கல்வியும், பயிற்சியும் அளிப்பதற்கான நிறுவனங்களும், பயிற்சி வேலைத்திட்டங்களும்
4. திறந்த சந்தையை சுதந்திமாக இயங்க விடுதல்
5. புதிய வணிகச்சந்தர்ப்பங்களுக்கான வசதிகள் உள்ள முதலீட்டை ஊக்குவிக்கும் முறையில் வணிகச் சூழலை உருவாக்கல்
6. அடிக்கட்டமைப்பு வசதிகளை போதியளவில் வழங்குதல்
7. அரசியல் பொருளாதார உறுதிநிலை
8. சமாதானத்திற்கான சூழ்நிலை (4× ½ = 2 புள்ளிகள்)

5. **a) நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் பங்களிப்பு**
1. இவ்வணிகங்கள் ஊழியர் உழைப்பு கூடுதல் என்பதனால் கூடுதலான தொழில் வாய்ப்புக்களை வழங்க முடிதல்.
2. உள்நாட்டு உற்பத்தியின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.
3. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்.
4. பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதனால் நகரமயமாக்கம் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் இழிவடைதல்.
5. வருமானப் பரம்பலின் முரண்பாடுகள் குறைவடைதல்.
6. பாரிய வணிகங்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், முடிவுப்பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல். பாரிய வணிகங்கள் ஈடுபடாத வணிகக் கருமங்களில் ஈடுபடுதல் (4× ½ = 2 புள்ளிகள்)

b) 1. ஆலோசனைச் சேவை
2. முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
3. ஆய்வும் தொழில் நுட்பச் சேவைகள்
4. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
5. சந்தை வசதிகளை வழங்கல் / விற்பனை வசதிகள்
6. சிறந்த சாதனைகளுக்கான பதக்கங்களை வழங்கல் (4× ½ = 2 புள்ளிகள்)

## வினா இல 03

1. a) சட்டப்பணம் பின்வரும் கருமங்களை ஆற்றுகின்றது.
   1. பரிமாற்று ஊடகமாகக் தொழிற்படல்
   2. பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவியொன்றாகக் கருமமாற்றுதல்
   3. பெறுமானத் திரட்டொன்றாக தொழிற்படல்
   4. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடமமொன்றாக் கருமமாற்றுதல்

   ஆனால் அண்மிய பணம் பெறுமானத்திரட்டொன்றாக மட்டுமே கருமமாற்றுகின்றது.

   (பூரணமான விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)

   b) 1. **அதே நேர தீர்ப்பனவு முறைமை (RTGS - Real Times Gross Settlement System)**

   இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாது உயர் தொழினுட்பத்தையும் தர நியமங்களையும் பயன்படுத்தித் தீர்ப்பனவு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள கணினிக் கொடுப்பனவு முறையொன்றாகும். மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பனவுகளை மேற்கொள்ள முடிவதால் இது முக்கியமானதாகக் காணப்படுவதுடன் இது நாட்டில் காணப்படுகின்ற பாரிய பெறுமதியுடன் கூடிய ஒரேயொரு உள்நாட்டுக் கொடுப்பனவு முறையாகவும் உள்ளது.

   (01 புள்ளி)

   2. **இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (Sri Lanka Inter - bank Payment System - SLPS)**

   கணினியினைப் பயன்படுத்தி வங்கிகளுக்கிடையில் இடம் பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற முறை இதுவாகும். இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இலங்கை மத்திய வங்கியும் மற்றும் வணிக வங்கிகளும் இணைந்து மூலதனமிட்டுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா கிளியரிங் (தனிக்) கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

   (01 புள்ளி)

2. a) ஆம் ( ½ புள்ளி)

   **காரணம்:-**
   1. கூடிய பெறுமானம் கொண்ட சொத்துக்களை முழுத்தொகையையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.
   2. குத்தகைக்காகச் செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்.
   3. இயந்திரம் காலம் கடந்தவையாக மாறும் பொழுது ஏறப்படுகின்ற நட்டத்தையும், மூலதன நட்டங்களையும் தவிர்த்துக் கொள்ளல்.
   4. பாரியளவு தொகையை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்ட முடிதல்.

   **( இவ்வினாவிற்கு இல்லை எனக்கூறி பொருத்தமான நியாயங்களை முன்வைத்தால் புள்ளி வழங்கவும்)** (3×½ =1½ புள்ளிகள்)

   b)

| வங்கிமேலதிகப் பற்று | வங்கிக்கடன் |
|---|---|
| 1. வங்கி நடைமுறைக்கணக்கிலுள்ள மீதியை விடக் கூடுதலாகக் குறிப்பிட்ட அளவு வரை காசோலை வழங்குவதற்கு வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்ற அனுமதியாகும். | 1. குறிப்பிட்ட வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியுடன் மீளச் செலுத்தும் நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து வங்கியொன்றினால் வழங்கப் படுகின்ற பணத் தொகையாகும். |
| 2. வங்கி மேலதிகப் பற்று வசதியினைப் பெறுவதற்கு நடைமுறைக் கணக்கொன்று கட்டாயமாக இருத்தல் வேண்டும். | 2. வங்கிக் கடனைப் பெற்றுக் கொள்ள நடைமுறைக் கணக்கொன்று தேவையற்றது. |

( 2×1 = 02 புள்ளிகள்)

3. a) காசோலை வரைபவர்:- பிரியந்தன்

   வரையுணி:- இலங்கை வங்கி

   பெறுவோர்:- ராகுலன் (மூன்று சரியாயின் 2 புள்ளி, இரண்டு சரியாயின் 1 புள்ளி, ஒன்று சரியாயின் ½ புள்ளி)

   b) 1. அட்டையின் உரிமையாளர்
   2. அட்டையினை விநியோகிக்கும் நிறுவனம்
   3. வியாபாரி எனும் விற்பனையாளர்
   4. கடன் அட்டைச் சங்கம் (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) முதலாம் தரப்பினர்:- அருச்சுனன்
இரண்டாம் தரப்பினர்:- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
மூன்றாம் தரப்பினர்:- காந்தன்
இழப்பீட்டுத்தொகை:- ரூ 3000000 (4× ½ = 2 புள்ளிகள்)

b) **பொறுப்புக் காப்புறுதி (The liability Insurance)**
மற்றோர் பிரிவினர்களுக்கு இடம்பெறும் நட்டம் தொடர்பாக ஏற்படும் பொறுப்பினைக் காப்புறுதி செய்வதே **பொறுப்புக் காப்புறுதி** எனப்படும். (01 புள்ளி)
1. பொது (மக்கள்) பொறுப்புக் காப்புறுதி **(General Liability Insurance)**
2. உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி **(Product Liability Insurance)**
3. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி **(Employer Libility Insurance)**

(2× ½ = 1 புள்ளி)

5. a) தொடர்பாடல் செயற்பாடு முழுமையடைவதற்கு செய்தியைப் பெற்றவர் அந்தச் செய்தியை புரிந்து கொண்டதாக ஏதோ ஒரு முறையில் அறிவிப்புச்செய்தல் வேண்டும். அதாவது எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தகைய பின்னூட்டல் மூலமே செய்தி சரியான முறையில் கிடைத்துள்ளது என்பதை உறுதிப்படுத்தவேண்டும். (பூரணமான விளக்கத்திற்கு 02 புள்ளி)

b) 1. ஊழியரைத் தூண்டுவதற்கு
2. தீர்மானம் மேற்கொள்வதை துரிதப்படுத்த
3. சந்தையில் மாற்றம் செய்வதற்கு
4. பிழைகளை குறைத்துக் கொள்ள
5. பயனுடைய தொடர்பிணைப்புக்கு
6. ஊழியர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள (4× ½ = 2 புள்ளிகள்)

## வினா இல 04

1. a) 1. பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்தல்
2 .பாதைகளை விரிவாக்குதல், நவீனமயப்படுத்தல்
3. சைகை முறைகளை நவீனமயப்படுத்தல்
4. வலு, சக்தி தாராளப்படுத்தல்
5. மாற்று வலுக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல்
6. பிரவேச வழிகளை விரிவாக்குதல்
7. வாகன நிறுத்துமிடங்களை உருவாக்குதல் (4× ½ = 2 புள்ளிகள்)

b) **போக்குவரத்தினதும் வழங்கல் சேவையினதும் அனுகூலங்கள்**
1. உற்பத்திகளைத் தொடர்ச்சியாகச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் நுகர்வோனின் நம்பிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
2. சகல கருமங்களும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனால் வீணாதல், கிரயமாதல் என்பன குறைவதன் காரணமாகக் கிரயத்தை இழிவுபடுத்திக்கொள்ள முடிதல்.
3. போட்டிக்குச் சிறப்பாக முகங்கொடுக்க முடிதல்.
4. இயந்திர உபகரணங்கள், ஊழியர்கள் சார்பாக ஏற்படும் நேர் செலவுகளை இழிவுபடுத்திக் கொள்ள முடிதல்.
5. உற்பத்திகளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்.
6. மூலப்பொருள் முகாமைத்துவம் நல்ல முறையில் இடம்பெறுவதனால் பிரச்சினைகள் ஏற்படாதிருத்தல்.
7. தொழிலில் தலைவராக உருவாக முடிதல்.

**2.** a) **இடைநடுவர்கள்**
1. மொத்தவியாபாரி
2. சில்லறை வியாபாரி
3. முகவர்

( மூன்றும் குறிப்பிட 01 புள்ளி, இரண்டு அல்லது ஒன்று குறிப்பிட ½ புள்ளி)

**உற்பத்தியாளருக்கான அனுகூலங்கள்**
1. உற்பத்தியாளர்களின் தொழிற்பாடுகள் இலகுவாக அமையும்
2. உற்பத்தியாளர்கள் முழுமையாக உற்பத்தி நடவடிக்கையில் கவனம் செலுத்த முடியும்
3. உற்பத்தியாளர் தனது பொருட்களுக்கான விநியோக நடவடிக்கைகளை முறையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.
4. நிதிப்பிரச்சினைகள் ஏற்படாது (3× ½ = 1½ புள்ளிகள்)

**நுகர்வோருக்கான அனுகூலங்கள்**

1. பொருட்களை இலகுவாகப் பெறமுடியும்
2. சரியான அளவில், சரியான தரத்தில் பொருட்களை பெறமுடியும்
3. தொடர்சிசியாக பொருட்களை பெற முடியும்
4. கடன்வசதிகளை பெறமுடியும் (3× ½ = 1½ புள்ளிகள்)

**3.** a) **வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்**

1. இயற்கை வளங்கள் பகிரப்பட்டுள்ள முறைகளிலுள்ள முரண்பாடுகள்
2. ஒப்பீட்டு ரீதியான கிரய நன்மைகள்
3. சில உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் சில நாடுகளில் சட்டரீதியான ஏகாதிபத்தியம் காணப்படல்
4. பண்ட மேம்பாடு
5. வியாபாரத் தடைகள் குறைவடைதல் (4× ½ = 2 புள்ளிகள்)

b) **i) கப்பல் தளச்சீட்டு (Warfingers Receipt)**

சுங்கத்திற்குப் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அப்பொருள்கள் பொறுப் பேற்கப்பட்டது எனக் குறிப்பிட்டு சுங்கத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணமாகும். (01 புள்ளி)

**ii) இறக்குமதிக் குறிப்பு (Import entry)**

இறக்குமதியாளர் சார்பாக துறைமுகத்திற்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் பொருட்கள் தொடர்பான உரிமையை வெளிப்படுத்துவதற்காக இறக்குமதியாளர் அல்லது அவரது பிரதிநிதியின் மூலம் சுங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணத்தையே இது குறிக்கின்றது. சுமைச்சீட்டு அல்லது இன்வொயிஸின் உதவி கொண்டு இவ்வாவணம் தயாரிக்கப்படும். (01 புள்ளி)

4. a)
1. நாணயக்கடிதம்
2. வங்கி ஆணை
3. இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள்:
4. இணைய வலையமைப்பு முற்செலுத்துகை அட்டை (Internet Pre paid card)
5. இணைய முற்செலுத்துகை வசதிகள் (Internet Pre paid facility)
6. இலத்திரனியல் கொடுப்பனவு சேவை நிறுவனங்களினூடாக கொடுப்பனவுகளை செய்தல் (Electronic payment system) (4× ½ = 2 புள்ளிகள்)

b) ஒரு சில நாடுகள் ஒன்றிணைந்து வரி, சுங்கவரி மற்றும் வியாபாரம் தொடர்பான ஒப்பந்தமொன்றை உருவாக்குதல் சுதந்திரமான வியாபார பிரதேசம் வியாபாரவலயம் (Trade Bloc) என்றழைக்கப்படும். வியாபார வலயம், சுதந்திர வியாபாரப் பிரதேசம் வியாபாரக் கூட்டு, வியாபாரச்சங்கங்கள் எனும் பெயர்களினாலும் அழைக்கப்படும். (01 புள்ளி)

**வியாபார வலயங்களுக்கான உதாரணங்கள்**

ஐரோப்பிய சங்கம் (EU)
ஆசியான் அமைப்பு (ASEAN)
8 நாடுகளின் குழு (G8) (01 புள்ளி)

**5. அனுகூலங்கள்**

1. வணிக உரிமையாளருக்கு பெரும் விசாலமான சந்தையை அண்மிக்க வாய்ப்புக் கிடைக்கும்.
2. மூடப்படாத சந்தை கிடைக்கும். அதாவது 24 மணிநேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் திறந்த வண்ணமே காணப்படும்.
3. பொருட்கள் திரட்டுதல், விநியோகித்தல் என்பவற்றிற்கான கிரயம் குறையும்.

**பிரதிகூலங்கள்**

1. கடுமையான போட்டி
2. வெப்தளத்தை உருவாக்க வேண்டிய தேவை
3. உயர்தொழில்நுட்ப அறிவு அவசியம்
4. விசேடமாக போட்டியை எதிர்கொள்ள வெப்தள சந்தைப்படுத்தல் நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டியிருப்பதுடன், அதற்கான செலவுகளையும் ஏற்க வேண்டியிருத்தல்

( மேற்கூறிய விடயங்களை உள்ளடக்கிய விடைக்கு முழுமையான புள்ளி வழங்கவும்)
(குறைந்தது 3 அனுகூலங்களும், 3 பிரதிகூலங்களும் குறிப்பிடப்படல் வேண்டும்)

## பகுதி 11

**வினா இல 05**

1. a) முகாமைத்துவச் செயன்முறையானது அடிப்படை முகாமைத்துவக் கருமங்கள் நான்கினை உள்ளடக்கிய செயன்முறையொன்றாகும். அதாவது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய நான்கு முகாமைத்துவக் கருமங்களை உள்ளடக்கிய செயன்முறையொன்றாகும். இவை ஒன்றோடு ஒன்று இணைந்த செயற்பாடுகளின் தொகுதியாகக் காணப்படுகின்றது.
( நான்கு முகாமைத்துவக் கருமங்களுக்கிடையிலான தொடர்பை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும். இதற்கு முகாமைத்துவச் செயல்முறைக்குரிய வரைபடத்தினையும் கொண்டு விளக்கங்களை கொடுக்கமுடியும்)

(பூரணமான விடைக்கு 2 புள்ளி)

   b) 1. தனிநபர்களது எதிர்பார்ப்புக்களை எதிர்பார்த்த முறையிலேயே நிறைவேற்றிக்கொள்வதற்கு
   2. தனிநபர்களின் பொருளாதார நிலைமையினை (வருமானம், செலவுகள்) சிறந்தமுறையில் கட்டுப்படுத்திக்கொள்வதற்கு.
   3. நேரத்தை முகாமைத்துவம் செய்வதற்கு.
   4. வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு.

(4× ½ = 2 புள்ளிகள்)

2. a) பல்வேறு முகாமைத்துவ மட்டங்களுக்கும் அம்மட்டங்களிலுள்ள முகாமையாளர்களிடம் காணப்பட வேண்டிய திறன்களுக்குமிடையில் உள்ள தொடர்பினை பின்வரும் வகையில் விளங்கப்படுத்தப்படவேண்டும்.
   - சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கும் தனி நபர்களுடனும் குழுக்களுடனும் இணைந்து கருமமாற்ற வேண்டி ஏற்படுவதனால் மானுடத்திறன் ஒரே அளவில் முக்கியமானதாகும்.
   - அமைப்பொன்றின் ஊழியர்களின் வேலைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுபவர்கள் கீழ்மட்ட முகாமையாளர்கள் என்பதனால் அவர்களுக்குக் தொழில்நுடப்த்திறன் கூடுதலாகத் தேவைப்படும்.
   - சிக்கலான சந்தர்ப்பங்களில் உருவாகின்ற புதிய கருத்துக்ககளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானமெடுத்தல் உயர்மட்ட முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்படுவதனால் அவர்களுக்கு எண்ணக்கருவாக்கத்திறன் கூடுதலாகத் தேவைப்படும்.
   - ஒப்பீட்டு ரீதியில் முகாமைத்துவ மட்டத்திற்கு காணப்படவேண்டிய திறன்கள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் முகாமையாளரொருவரின் வகிபாகத்தின் வெற்றிக்கு இம்மூன்று திறன்களும் அவரிடம் காணப்படல் மிக அத்தியாவசியமான விடயமொன்றாகும். (பூரணமான விடைக்கு 2 புள்ளி)

   b) 1. நிறுவனநோக்கம், வளங்களுடன் பொருந்தக் கூடியதன்மை
   2. ஏற்றுக்கொள்ளக் கூடியதன்மை
   3. நடைமுறைப்படுத்தக் கூடியதன்மை
   4. சட்டரீதியானதன்மை (4× ½ = 2 புள்ளிகள்)

3. a) **திட்டமிடலின் முக்கியத்துவம்**
   1. எதிர்கால நிச்சயமற்ற நிலைமைகளுக்கும் உறுதியற்ற இயங்குசூழலுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு.
   2. பற்றாக்குறையான வளங்களிலிருந்து உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு.
   3. கட்டுப்பாட்டிற்கான வசதிகளை வழங்குகின்றது.
   4. திடட்மிடலின் மூலம் முகாமையாளர்களுக்கு எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
   5. ஏனைய முகாமைத்துவக் கருமங்களுக்கு வழிகாட்டுவதற்கும் இணைபாக்கம் செய்வதற்கும் தேவைப்படல்.
   6. நிறுவனத்தின் தொடரச்சியான வாழ்தன்மையினையும் விருத்தியையும் உறுதிபடுத்திக் கொள்வதற்கும்
   7. நிகழ்கால மற்றும் எதிர்காலப் போட்டி நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கு
   8. ஏனைய பிரிவினர்களை ஊக்கப்படுத்துவதற்குக் காரணங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் தேவையாக இருத்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

   b) **திணைக்களப்படுத்தலின் அடிப்படைகள்**
   1. தொழிற்பாட்டின் அடிப்படை
   2. உற்பத்திப்பொருள் அடிப்படை
   3. வாடிக்கையாளர் அடிப்படை
   4. புவியியல் அடிப்படை
   5. கலப்பு அடிப்படை
   6. செயற்பாட்டு அடிப்படை (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) முறையான அமைப்பினுள் ஒழுங்கமைப்பாகவுள்ள அங்கத்தவர்களிடையே உருவாகின்ற இடைத்தொடர்புகளின் நெருக்கமும் மற்றும் பொதுத் தேவையினை அடிப்படையாகக் கொண்டு தானாக உருவாகுபவை முறையற்ற குழுக்கள் (Informal Groups) எனப்படும். முறையான அமைப்புக்கள் சிலவற்றில் அங்கத்தவர்களும் கூட இதில் உள்ளடக்கி இருப்பர்.

(பூரணமான விடைக்கு 2 புள்ளி)

b) **ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவம்**

1. ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்துக்கொள்ள முடிதல்.
2. சிறந்த தொழில் உறவினை மேம்படுத்தல்.
3. வணிகத்தின் நன்மதிப்பு அதிகரித்தல்.
4. ஊழியர் விலகல் குறைவடைதல்.
5. ஊழியரக்ளின் விசேட திறன்களிலிருந்தும் தேர்ச்சிகளிலிருந்தும் அனுகூலஙக்ளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
6. வளங்களிலிருந்து உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
7. நிறுவனதின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடிதல்.
8. திருப்தியுடன்கூடிய ஊழியர் குழுவொன்று உருவாதல்.
9. வள வீண்விரயம் குறைவடைதல்.
10. ஊழியர்கள் நிறுவனத்தை விட்டு விலகிச் செல்லல் தவிர்க்கப்படுவதனால் ஊழியர் புரள்வு குறைவடைதல்.

(4× ½ = 2 புள்ளிகள்)

5. a)

| உற்பத்திப் பொருள் தளஅமைப்பு | செய்முறைத் தளஅமைப்பு |
|---|---|
| 1. ஒரு வகையான பொருள் உற்பத்தி செய்யப்படும். | 1. பல்வகைப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். |
| 2. பொருள் உற்பத்திக்கான நேரம் குறைவு | 2. பொருள் உற்பத்திக்கான நேரம் அதிகம் |
| 3. தளஅமைப்பிற்கான செலவு அதிகம் | 3. தளஅமைப்பிற்கான செலவு குறைவு |
| 4. குறைந்தளவான இடம் தேவை | 4. பாரியளவு இடம் தேவை |

(2×1= 2 புள்ளிகள்

b) **உற்பத்தி முறையொன்றைத் தெரிவு செய்யும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. சந்தையின் அளவு
3. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமும் தேவையான உபகரணங்களும்
4. ஏற்கவேண்டிய கிரயம்
5. கொள்வனவு செய்யும்போக்கு (தொடர்ச்சியானதா/இடைக்கிடையா)
6. வளங்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் வசதி

**வினா இல 06**

1. a)

| | x | y |
|---|---|---|
| உழைப்பு உற்பத்தி திறன் | 5 | 6 |
| பூரண உற்பத்தி திறன் | 1.25 | 1.5 |

(4× ½ = 2 புள்ளிகள்)

b) **உற்பத்தித் திறன் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்**

1. வணிகத்தின் வளங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்கு
2. வணிகத்தை விரிவுபடுதத்ல் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு
3. ஏனைய ஒத்த நிறுவனங்களுடன் உற்பத்தித் திறனை ஒப்பீடு செய்வதற்கு
4. வணிக நிறுவனத்தின் முன்னேற்றத்தினை விளங்கிக்கொள்வதற்கு (4× ½ = 2 புள்ளிகள்)

2. நுகர்வோர் தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொருளொன்றிற்கு அல்லது சேவையொன்றிற்கு இருக்கும் ஆற்றலே தரம் (Quality) ஆகும். (02 புள்ளிகள்)

**பொருளொன்றின் தரத்தில் இருக்கவேண்டிய கூறுகள்**

1. சிறந்த செயற்பாட்டுத் தன்மை
2. நம்பகத்தன்மை
3. பொருத்தப்பாடுடையதாகவிருத்தல்
4. நீடித்த பாவனை
5. நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்.
6. பாதுகாப்புத் தன்மை

(4× ½ = 2 புள்ளிகள்)

3. a) **இழிவு இருப்பு மட்டத்தை விடக் களஞ்சியசாலையின் இருப்பு கீழ் நிலைக்குச் செல்லும்போது ஏற்படும் பிரதிகூலங்கள்**

1. உற்பத்திக் கருமங்கள் தொடர்ந்து இடம்பெறாதிருத்தல்.
2. இயந்திராதிகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்தாது விடப்படுவதனால் வணிகத்திற்கு முறையற்ற கிரயமொன்று ஏற்படுதல்
3. ஊழியர்களின் உச்ச சேவையினைப் பெற்றுககொள்ள முடியாததன் காரணமாக வேலை செய்யாத காலம் உயர்வடைதல்.
4. திடீரெனக் கிடைக்கப்பெறும் கட்டளையினைப் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல்.
5. வணிகத்திற்குக் கட்டளைகள் கிடைக்கப்பெறாமல் விடல். (4× ½ = 2 புள்ளிகள்)

b) **கணனியுடன் இணைந்த உற்பத்தி முறை**

உற்பத்தியினை வடிவமைப்பதற்கும், உற்பத்திச் செயன்முறை முகாமைத்துவத்திற்கும் கணினியைப் பயன்படுததுகின்ற முறையாகும். அதாவது உற்பத்ததிச் செயன்முறையினை விருத்தி செய்தல் கட்டுப்படுத்தல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கணினித் தொழில்நுட்ப முறையாகும். (01 புள்ளி)

**தரநியமம்**

தேசிய அல்லது சர்வதேச நியமங்களுக்கமைய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தர நியமங்கள் பின்பற்றுதல் என்பதன் கருத்தாகும். இதன் மூலம் தரம் தொடர்பாக நுகரவோரது நம்பிக்கையினை வெற்றிகொள்ள முடியும். (01 புள்ளி)

4. a) **தேவைகள் (Needs), விருப்பங்கள் (Wants), கேள்வி (demand) என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு**

மனிதனிடமுள்ள ஏதேனும் அடிப்படைத் தூண்டுதல் நிலைமையினை நிறைவேற்றுதல் அல்லது மனிதனின் வாழ்தன்மையை உறுதிப்படுத்துவற்காக பிரதானமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமையே தேவை எனலாம்

தேவையொன்றிற்குக் குறித்த பொருள் அல்லது சேவையொன்றுக்கு இருக்கின்ற நாட்டம் அதாவது விருப்பம் அல்லது நபரொருர் தனது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக உற்பத்திப் பொருள்களில் ஈடுபடுதல் விருப்பங்கள் எனப்படும்.

தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏற்படுகின்ற விருப்பங்கள், அத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குள்ள ஆற்றலின் காரணமாகவே கேள்வி ஏற்படுகின்றது. இந்த வகையில் தேவை, விருப்பம், கேள்வி என்பவற்றிற்கிடையில் தொடர்பு காணப்படுகின்றது. (02 புள்ளிகள்)

b)
1. தனிநபர்கள்
2. நிகழ்வுகள்
3. இடம்
4. அமைப்புக்கள் (4× ½ = 2 புள்ளிகள்)

5. **1. உற்பத்திக்கலவை**

எவரேனும் விற்பனையாளரொருவரினால் விற்பதற்கு முன்வைக்கப்படுகின்ற உற்பத்தித் தொகுதியே உற்பத்திக் கலவை எனப்படும். (1½ புள்ளி)

**2. உற்பத்தியின் நீளம்:- 10**

(பாண்வகை 3, பணிஷ் வகை 4, கேக் வகை 3) (½ புள்ளி)

**3. உற்பத்தியின் அகலம்:- 3**

(பாண்வகை , பணிஷ் வகை , கேக் வகை ) (½ புள்ளி)

**4. உற்பத்தியின் ஆழம்:-**

பாண்வகை 3, பணிஷ் வகை 4, கேக் வகை 3 (½ புள்ளி)

**5. உள்ளடக்கம்**

அனைத்து உற்பத்திகளும் வெதுப்பக உற்பத்திகளாகக் காணப்படுகின்றமை (01 புள்ளி)

**வினா இல 07**

1. சந்தையில் நிலைத்திருத்தல் (Markert positioning) என்பது பொருளொன்று அல்லது சேவையொன்று தொடர்பாக நுகர்வோரின் மனதில் சாதகமான மனப்பாங்கொன்றினைக் கட்டியெழுப்புதலைக் குறிக்கும். ஏதேனும் பொருளொன்றை அல்லது சேவையொன்றை சந்தையில் மிகவும் சிறந்த முறையில் நிலைநிறுத்தச் செய்வதாகும். (02 புள்ளிகள்)

**சந்தையில் நிலைத்திருக்கக்கூடிய முறைகள்**

1. பொருளினுள் பல்வேறு பண்புகளையும் பயன்களையும் உள்ளடக்குதல்.
2. போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது மிக உயர்வான சேவையொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.
3. பல்வேறு உபாய முறைகளை பிரயோகித்து வாடிக்கையாளர்களின் உள்ளத்தில் பொருள் அல்லது சேவையை ஆழமாகப் பதியச் செய்தல். (2× 1 = 2 புள்ளிகள்)

2. a) சின்னமொன்றிற்கே உரித்தான அடையாளமானது சின்னக் குறியீடு (Brand Mark) என அழைக்கப்படும். இது **பதிவு செய்யப்படும்பொழுது வியாபாரக் குறியீடு (Trade Mark)** எனப்படும்.

(01 புள்ளி)

இலங்கையில் வணிகங்கள் தமது சின்னத்தினை 2003 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்கச் **புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் வியாபாரக் குறியீட்டினைப் பதிவு செய்யும் திணைக்களத்தில்** பதிவு செய்ய வேண்டும். (01 புள்ளி)

b) **வணிகத்திற்கு மேம்படுத்தல் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்கள்**

1. புதிய உற்பத்தியொன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு
2. உற்பத்திகளுக்குத் தற்போது சந்தையில் காணப்படுகின்ற கேள்வியை வீழ்ச்சியடையாது பேணிச் செல்வதற்கு.
3. நிறுவனத்தின் பிரதி விம்பத்தை விருத்தி செய்து கொள்வதற்கு
4. போட்டியை எதிர்கொள்வதற்கு
5. இலக்கு வாடிக்கையாளர் உற்பத்தி தொடர்பான தகவல்களை அறியச் செய்வதற்கு

(4× ½ = 2 புள்ளிகள்)

3. **a) பொதியிடலொன்றைத் திட்டமிடும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. பொதியிடலின் மூலம் உற்பத்திப் பொருளுக்குக் கிடைக்கும் பயன்கள் .
3. தொழில்நுட்பப் பொருத்தப்பாடு
4. பொதியின் கூறுகள்
5. வியாபாரிக்குள்ள வசதிகள்
6. நுகர்வோருக்குக் கிடைக்கப்பெறும் பயன்களும் வசதிகளும்
7. சூழலை நேசிக்கும் தன்மை
8. பொதியிடலுக்காக ஏற்படும் கிரயம் (4× ½ = 2 புள்ளிகள்)

b) 1. நுகர்வோர் தேவைகளும், விருப்பங்களும்
2. கிரயம்
3. வசதி
4. தொடர்பாடல் (4× ½ = 2 புள்ளிகள்)

4. a)

| **குறுங்கால நிதித்தேவை** | **நீண்டகால நிதித்தேவை** |
|---|---|
| ❖ சம்பளக் கொடுப்பனவு<br>❖ தொலைபேசிக்கட்டணம்<br>❖ மின்சாரக்கட்டணம்<br>❖ விளம்பரச்செலவு<br>❖ காப்புறுதிக்கட்டணம் | ❖ தையல் இயந்திரக்கொள்வனவு<br>❖ அலுவலக உபகரணக் கொள்வனவு<br>❖ ஆடைத் தொழிற்சாலைக்கான கட்டிடக் கொள்வனவு |

(2× ½ = 1 புள்ளி) (2× ½ = 1 புள்ளி)

b) **வெளியக மூலங்களில் நிதி திரட்டும் வழிமுறைகள்**

1. பங்கு வழங்கல்
2. வங்கிக்கடன் பெறல்
3. குத்தகை
4. வங்கிமேலதிகப்பற்று
5. அடகு வைத்தல்
6. வாடகைக்கொள்வனவு (4× ½ = 2 புள்ளிகள்)

5. a) **நேர் அனுகூலங்கள்**

1. பங்கு இலாபம்
2. வட்டி
3. ஒதுக்கங்களை மூலதனமாக்கல்
4. உரித்து வழங்கல்
5. மூலதன இலாபம் (4× ½ = 2 புள்ளிகள்)

b) 1. அனைத்துப் பங்கு விலைச்சுட்டி (ASPI) All share price Index
2. S & P இலங்கை 20 விலைச்சுட்டி S & P SL 20 Index
3. 3. மொத்த வருமான விலைச்சுட்டி (TRI) Total Return Index (2× 1 = 2 புள்ளிகள்)

**வினா இல 8**

1. a) **நிதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்**
   1. தேவையான நிதியின் அளவு
   2. நிதி தேவைப்படும் காலம்
   3. கிரயம் (நிதியத்தைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றைப் பராமரித்தலும்)
   4. வணிக அமைப்பின் தன்மை (தனியுடைமை/பங்குடமை/வரையறுக்கப்பட்ட கம்பனி)
   5. வைக்கப்பட வேண்டிய பிணைகள் தொடர்பான விடயம்.
   6. வணிகத்தின் மூலதனக் கட்டமைப்பில் ஏற்படுத்தும் தாக்கம்.
   7. நிதியினை ஈடுபடுத்தும் செயற்றிட்டத்தின் தன்மையும், அதனால் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்களும்.
   8. வணிகத்தின் முகாமைத்துவத்திற்கு ஏற்படும் அழுத்தங்கள் (4× ½ = 2 புள்ளிகள்)

b) **நிதி விகிதங்கள்**
   1. திரவ விகிதங்கள் (Liquidity Ratios)
   2. இலாபத் தன்மை விகிதங்கள் (Profitability Ratios)
   3. செயற்பாட்டு விகிதங்கள் (Activity Ratios)
   4. இணைப்பு விகிதங்கள் (Leverage Ratios / Gearing Ratios) (4× ½ = 2 புள்ளிகள்)

**2.** a) 1. **நிதி நிறுவனங்கள்**
உதாரணம்:- 1. வங்கித்துறை
2. வைப்புக்களைப் பொறுப்பேற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
3. ஏனைய விசேட நிதி நிறுவனங்கள்
4. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

**2. நிதிக்கருவிகள்**
உதாரணம்:- 1. திறைசேரி உண்டியல்கள் 5. திறைசேரி முறிகள்
2. சாதாரணபங்குகள் 6. முன்னுரிமைப்பங்குகள்
3. வணிகப்பத்திரம் 7. வைப்புச்சான்றிதழ்
4. கம்பனித்தொகுதிக்கடன்

**3. நிதிச்சந்தை**
உதாரணம்:-1. பணச்சந்தை 2. நிதிச்சந்தை

**4. நிதிஉட்கட்டமைப்பு வசதிகள்**
உதாரணம்:-1. சமகால மெய்நேர மொத்தத் தீர்ப்பனவு முறை
2. பத்திரங்களற்ற பிணைப் பத்திர தீர்ப்பனவு முறை
3. பிரமைப்படுததிய காசோலைத் தீர்ப்பனவு முறை
4. உலகளாவிய வங்கிகளுக் கிடையிலான தொடர்பாடல் சங்கம்

5. **மத்தியவங்கி**

(நான்கு கூறுகள் குறிப்பிட $4\times ½ = 2$ புள்ளிகள்)
(இரண்டு உதாரணங்கள் குறிப்பிட $8\times1/4= 2$ புள்ளிகள்)

3. a) **ஏனைய வளங்களுடன் ஒப்பிடும் போது மனிதவளங்களில் காணப்படும் விசேட பண்புகள்**
   1. உயிருள்ள வளமொன்றாக இருத்தல்.
   2. சிந்திப்பதற்கும் மாற்றுச் செயற்பாடுகளைக் காட்டுவதற்கும் முடியுமாக இருத்தல்.
   3. ஏனைய வளங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
   4. பயிற்சியளிப்பதன் மூலம் பெறுமானத்தை அதிகரிக்க முடிதல்.
   5. குழுவொன்றாகக் கருமமாற்ற முடிதல்.
   6. நடத்தைசார் சிக்கல் தன்மை கொண்டதாலும் எதிர்வுகூற முடியாது போதலும்
   7. ஆக்கபூர்வமான ஆற்றல்களுடன் கூடியதாக இருத்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

b) வணிகமொன்றின் தொழில்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாகவும் அத்தொழிலினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஊழியர்களிடம் இருக்க வேண்டிய தகைமைகள் /பண்புகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் முறையான பரிசீலனை அல்லது ஒழுங்குமுறையொன்றே தொழிற்பகுப்பாய்வாகும். (02 புள்ளிகள்)

4. **சார்பானது**

1. நவீன அறிவுள்ள மனிதர்களை ஈர்ப்பு செய்ய முடிதல்
2. அதிகளவானோரை ஈர்க்கக் கூடியதாகவிருத்தல்
3. பதவிக்கு பொருத்தமான நபர்களை இணைத்துக்கொள்ளமுடிதல்
4. பயிற்சி பெற்ற ஊழியர்களை இணைத்துக்கொள்ளமுடிதல் (4× ½ = 2 புள்ளிகள்)

**எதிரானது**

1. நிறுவனத்தில் இருக்கின்ற ஊழியர்களை ஊக்குவிப்பதில் தடைகள் உருவாதல்
2. ஈர்ப்பிற்கான கிரயம் உயர்வடைதல்
3. ஈர்ப்புச் செய்வதற்கான காலம் அதிகமாகவிருத்தல்
4. தொழில் பெறுநர், தொழில் வழங்குநர்களுக்கிடையேயான தொடர்புகளில் பாதகமான தாக்கம் ஏற்படல் (4× ½ = 2 புள்ளிகள்)

**5. தொழில் விபரணம்**

- பதவியின் பெயர்:- கணக்கு எழுதுவினைஞர்
- தரம்:- 111
- தொழில் இலக்கம்:- 125
- நியமனத்தின் தன்மை:- நிரந்தரம்
- தொழில் அமைந்துள்ள துறை/ திணைக்களம்:- நிதிப்பிரிவு
- வகை கூறவேண்டிய அலுவலகர்:- உதவிக்கணக்காளர்
- சம்பள அளவுத்திட்டம்:- 23500×12
- தகுதிகாண்காலம்:- 6 மாதங்கள்
- கடமைகளும் பொறுப்புக்களும்:-
  1. கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்தல்
  2. சில்லறை காசேடு, காசேடு தயாரித்தல்
  3. வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல்
  4. சம்பளப்பட்டியலைத் தயாரித்தல்
- சேவை நிபந்தனைகள்:-
  1. மு.ப 8.30- பி.ப 4.30 வரை வேலை செய்தல்
  2. மேற்குறிப்பிட்ட பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றிற்கு மேலதிகமாக முதல்வரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகள், கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

(8× ½ = 04புள்ளிகள்)